வருகின்ற 2020-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ம் தேதி புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பவானி நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டம் நடைபெற உள்ளது. கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் பொருட்கள் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னிலை: திருமதி.S.M.பாரிஜான் பி.ஏ.,
தனி அலுவலர் (ம) ஆணையாளர்

1. ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் செப்டம்பர் 2020-ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

2. கோவிட் -19 கொரோனா நோய் தொற்று தடுப்பு பணிக்காரணமாக பிறப்பிக்கப்பட்ட பொது ஊரடங்கு காலத்தில் 01.04.2020 முதல் 31.05.2020வரை உள்ள காலத்திற்கு உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படாத கடைகள்/ வரியில்லா இனங்களுக்கு வாடகைத் தொகையினை செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்து உத்திரவிடப்பட்டுள்ளது. அரசாணை எண்.298, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 02.09.2020-ஐ மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(ந.க.எண். 480/2020/அ2)

3. பொது சுகாதாரப் பிரிவு வாகனம் TN 36D 4020 ஆகிய வாகனங்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை செப்பனிட்டு தகுதிசான்று புதுப்பிக்க ஆகும் செலவினத்திற்கு ஏற்கனவே நகர்மன்றம் தீர்மான எண்: 61, நாள்: 31.03.2020-ல் மன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளதன் அடிப்படையில் 01.09.2020-ஆம் தேதியன்று மேற்படி வாகனத்திற்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1) TN 36 D 4020 வாகனத்திற்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் விபரம்:

வ. எண்	பொருள்	ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்
1.	ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ், 63, வைரபாளையம் நால்ரோடு, வாட்டர் ஆபிஸ் ரோடு, கருங்கல்பாளையம், ஈரோடு	ரூ.48900/-
2.	ஸ்ரீ முருகன் ஆட்டோஸ், 26, செங்கோட்டையா நகர், வைரபாளையம், ஈரோடு.	ரூ.49650/-

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் **TN 36 D 4020** வாகனத்திற்கு வரிசை எண்: வரிசை எண்: 1- ல் குறிப்பிட்டுள்ள ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ், ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளிகளின் விலைவிகிதம் மற்றொன்றை விட குறைவாக உள்ளதால் அதனை மன்றம் ஏற்கலாம். அவசர அவசியம் கருதி தனி அலுவலர் பவானி நகராட்சி அவர்களிடம் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம் (ந.க.எண்.274/2020/எச்1)

4. பவானி நகராட்சி தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்புத் திட்டம் (Turip 2020-2021)-ன் கீழ் ஒப்பந்தப்புள்ளிகளை மாநில அளவில் விளம்பரம் செய்ய இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை , சென்னை அவர்களின் வழிகாட்டுதலின் படி (வெளியீட்டு ஆணை எண். 2813/27.07.2020) 28.07.2020 தேதியன்று தி இந்து ஆங்கில நாளிதழ் மற்றும் தினசெய்தி தமிழ் நாளிதழ் ஆகியவற்றில் பிரசுரம் செய்தமைக்காக Eyedea Brand Solutions - Chennai அவர்களிடம் இருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.1,27,523/- செலவினத்தினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 608/2020/இ1)

5. பவானி நகராட்சியில் கோவிட்-19 பொது ஊரடங்கு காலத்தில் 01.04.2020 முதல் 31.05.2020 வரை உள்ள காலத்திற்கு உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படாத நகராட்சி கடைகள் மற்றும் வரியில்லா இனங்களுக்கு வாடகை தொகையினை செலுத்துவதிலிருந்து குத்தகைதாரர்களுக்கு விளக்குஅளிக்கப்பட்டது தொடர்பாக. அரசாணை (ப) எண்.298 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி-4) துறை நாள்:02.09.2020 -ல் ஆணையிடப்பட்டதை தொடர்ந்து, மேற்படி அரசாணையினை மன்றம் தனது தீர்மானம் நாள்: 30.09.2020-ன்படி பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, இவ்வலுவலக கடித ந.க.எண்.480/2019/அ2 நாள்: 26.09.2020-ன்படி 01.04.2020 முதல் 31.05.2020 வரை செயல்படாத கீழ்கண்ட பட்டியலில் உள்ள நகராட்சி கடைகள் மற்றும் வரியில்லா இனங்களின் வாடகை தொகையினை (GST உட்பட) இரண்டு மாதங்களுக்கு தள்ளுபடி செய்யலாம் என உரிய அலுவலர்கள் குழுவினால் உறுதி செய்து அறிக்கை பெறப்பட்டுள்ளது

வ .எண்	வரிவிதிப்பு எண்	குத்தகை இனங்கள் வரரியாக (கடைகள்/வாரச்சந்தை/கட்டணகழிப்பிடங்கள் /பேரூந்து நுழைவு கட்டணம்/தினசரி சந்தை /சைக்கிள் /வாகனம் நிறுத்தங்கள் மற்றும் இதர இனங்கள் வாரியாக	ஏப்ரல் 2020		மே 2020		மொத்தம் (01.04.2020 முதல் 31.05.2020 வரை)	
			மாத வாடகை	GST	மாத வாடகை	GST	மாத வாடகை	GST
1	2	3	4	5	6	7	8	9
1	055/14	எஸ்.மலர்விழி - புதிய பேருந்து நிலையம் கடை எண்.14	10925	1967	10925	1967	21850	3933
2	055/30	பி.பழனிசாமி - புதிய பேருந்து நிலையம் கடை எண்.1	17024	3064	17024	3064	34048	6129
3	055/31	பி. குப்புசாமி - புதிய பேருந்து நிலையம் கடை எண்.2	10925	1967	10925	1967	21850	3933
4	055/34	பி பரமசிவம் - புதிய பேருந்து நிலையம் கடை எண்.5	10925	1967	10925	1967	21850	3933
5	055/35	எஸ்.கார்த்திகேயன் - புதிய பேருந்து நிலையம் கடை எண்.6	10925	1967	10925	1967	21850	3933
6	055/36	எஸ்.கார்த்திகேயன் -- புதிய பேருந்து நிலையம் கடை எண்.7	10925	1967	10925	1967	21850	3933
7	055/37	ஏ.சுப்ரமணியம் - புதிய பேருந்து நிலையம் கடை எண்.8	10925	1967	10925	1967	21850	3933
8	055/47	கே.சிவக்குமார் - புதிய பேருந்து நிலையம் கடை எண்.16	4025	725	4025	725	8050	1449
9	055/56033	டி. ஜெயந்தி - புதிய பேருந்து நிலையம் கடை எண்.4	10925	1967	10925	1967	21850	3933

10	055/56052	சி. சரஸ்வதி - புதிய பேருந்து நிலையம் கடை எண்.21	7130	1283	7130	1283	14260	2567
11	055/56058	பி. லீலாவதி - புதிய பேருந்து நிலையம் கடை எண்.27	8625	1553	8625	1553	17250	3105
12	055/57	எம். கௌரி -புதிய பேருந்து நிலையம் கடை எண்.26	8625	1553	8625	1553	17250	3105
13	055/61	எஸ். ஞானசௌந்தரம் புதிய பேருந்து நிலையம் கடை எண்.30	9315	1677	9315	1677	18630	3353
14	055/62	ஜி.கற்பகம் க/பெ. ஜான சுந்தரம் புதிய பேருந்து நிலையம் கடை எண்.31	10235	1842	10235	1842	20470	3685
15	055/63	ஜே.கோபிநாத் த/பெ. ஜெயராமன் ,புதிய பேருந்து நிலையம் -அசைவ உணவு விடுதி	13225	2381	13225	2381	26450	4761
16	055/71	தமிழ்நாடு போக்குவரத்து கழகம் பதிவு அலுவலகம் , புதிய பேருந்துநிலையம்	1234	222	1234	222	2468	444
17	055/78031	ஆர்.வசந்தா புதிய பேருந்து நிலையம் - உணவு விடுதி	12765	2298	12765	2298	25530	4595
18	055/78032	குருநாதன் - புதிய பேருந்து நிலையம் கடை எண்.17	4025	725	4025	725	8050	1449
19	055/78036	ஜான்சன், புதிய பேருந்து நிலையம் கடை எண்.28	8625	1553	8625	1553	17250	3105
20	055/78037	பி.தங்கராஜ் - புதிய பேருந்து நிலையம் கடை எண்.20	3680	662	3680	662	7360	1325
21	055/78038	ஆர். ரங்கசாமி -புதிய பேருந்து நிலையம் கடை எண்.29	8625	1553	8625	1553	17250	3105
22	055/79016	அன்னை பவானி - புதிய பேருந்து நிலையம் கடை எண்.40	2053	370	2053	370	4106	739
23	055/80	நிர்வாக இயக்குநர், ஆவின்	3105	559	3105	559	6210	1118
24	055/87	ஜே.பாக்கியம் க/பெ. ஜெயராமன் - புதிய பேருந்து நிலைய கடை	4500	810	4500	810	9000	1620
25	055/88	எம்.ரவிச்சந்திரன் - புதிய பேருந்து நிலைய கடை	4500	810	4500	810	9000	1620
26	055/89	சி.செல்வம் த/பெ. சின்னு படையாச்சி - புதிய பேருந்து நிலைய கடை	4500	810	4500	810	9000	1620
27	055/90	திருமதி - ஆர். வசந்தா க/பெ. ராஜமாணிக்கம் புதிய பேருந்து நிலைய கடை	4500	810	4500	810	9000	1620
28	055/92	என்.எஸ். மணி த/பெ. செங்கோட கவுண்டர் - புதிய பேருந்து நிலைய கடை	4500	810	4500	810	9000	1620
29	055/93	திருமதி. புஷ்பா க/பெ. மாணிக்கம் புதிய பேருந்து நிலைய கடை	4500	810	4500	810	9000	1620
30	055/94	ஏ. பழனியப்பன் த/பெ.அப்பாச்சி கவுண்டர் - புதிய பேருந்து நிலைய கடை	4500	810	4500	810	9000	1620
31	055/BD01/00012	ஆர்.பாரதி - புதிய பேருந்து நிலையம் கடை எண். 18	4100	738	4100	738	8200	1476
32	055/BD01/00015	ஜி.நித்யபிரியா புதிய பேருந்து நிலையம் கடை எண். 15	4100	738	4100	738	8200	1476

33	055/78029	ஏ.சிவக்குமார் - புதிய பேருந்துநிலையம் கடை எண். 3	10925	1967	10925	1967	21850	3933
34	055/56068	வி. ஸ்ரீதர் - செல்லாண்டியம்மன் தினசரி மார்க்கெட் கடை எண். 2	4600	828	4600	828	9200	1656
35	055/64	பி.எஸ். வரதராஜன் - செல்லாண்டியம்மன் தினசரி மார்க்கெட் கடை எண். 1	4600	828	4600	828	9200	1656
36	055/66	பி.எம்.பழனியப்பன் - செல்லாண்டியம்மன் தினசரி மார்க்கெட் கடை எண். 3	4600	828	4600	828	9200	1656
37	055/67	ஏ.சரஸ்வதி - செல்லாண்டியம்மன் தினசரி மார்க்கெட் கடை எண். 4	4600	828	4600	828	9200	1656
38	055/083	பர்வதா - செல்லாண்டியம்மன் தினசரி மார்க்கெட் கடை எண். 4	1500	270	1500	270	3000	540
39	055/082	ஆர்.உதயகுமாரி - செல்லாண்டியம்மன் மார்க்கெட் கடை	1500	270	1500	270	3000	540
40	055/085	எஸ். ராஜேஸ்வரி - செல்லாண்டியம்மன் தினசரி மார்க்கெட் கடை	1500	270	1500	270	3000	540
41	055/086	கே.ஈஸ்வரன் - செல்லாண்டியம்மன் தினசரி மார்க்கெட் கடை	1500	270	1500	270	3000	540
42	055/78039	கே.எஸ்.சீரங்கம் - பழைய பேருந்து நிலையம் கடைஎண். 1	1725	311	1725	311	3450	621
43	055/78040	கே.எஸ்.சீரங்கம் - பழைய பேருந்து நிலையம் கடைஎண். 2	1725	311	1725	311	3450	621
44	055/78042	ராஜமாணிக்கம் - பழைய பேருந்து நிலையம் கடை எண் . 8	1725	311	1725	311	3450	621
45	055/78043	டி.ஸ்ரீதர் - பழைய பேருந்து நிலையம் கடை எண்.3	1725	311	1725	311	3450	621
46	055/78044	டி.ஸ்ரீதர் - பழைய பேருந்து நிலையம் கடை எண்.4	1725	311	1725	311	3450	621
47	055/78045	நேரு ராஜேந்திரகுமார் - பழைய பேருந்து நிலையம் கடை எண். 5	1725	311	1725	311	3450	621
48	055/78047	பி.வி.ரங்கராஜீ - பழைய பேருந்து நிலையம் - கடை எண்.7	1725	311	1725	311	3450	621
49	055/78048	ஜி.குருசாமி - பழைய பேருந்து நிலையம் - கடை எண்.9	1725	311	1725	311	3450	621
50	055/78049	ஜி.குருசாமி - பழைய பேருந்து நிலையம் - கடை எண்.10	1725	311	1725	311	3450	621
51	055/78051	ஆர். வெங்கடாச்சலம் - பழைய பேருந்து நிலையம் கடை எண். 12	1725	311	1725	311	3450	621
52	055/78052	எஸ்.என். முனியப்பன் - பழைய பேருந்து நிலையம் கடை எண். 11	1725	311	1725	311	3450	621
53	055/BD01/00013	சுரேஷ்குமார் - பழைய பேருந்து நிலையம் கடை எண். 14	1800	324	1800	324	3600	648

54	055/BD01/00017	ஆர்.பி. பரணிதரன் - பழைய பேருந்து நிலையம் கடை எண். 13		1850	333	1850	333	3700	666
55	055/79007	எம்.செல்வி - க/பெ. மோகன் - அந்தியூர் ரோடு - ஜங்சன் கடை எண். 1		7000	1260	7000	1260	14000	2520
56	055/79008	செல்வகுமார் - அந்தியூர் ரோடு ஜங்சன் கடை எண். 1		7000	1260	7000	1260	14000	2520
57	055/79009	திருமதி. மாலதி - அந்தியூர் ரோடு ஜங்சன் கடை எண். 1		7000	1260	7000	1260	14000	2520
58	055/79014	கே.முருகன் த/பெ. கந்தசாமி - அந்தியூர் ரோடு ஜங்சன் கடை எண். 1		5687	1024	5687	1024	11374	2047
59	055/79010	கே.மணியகாரன் - மீன் மார்கெட் வணிக வளாக கடை		1725	311	1725	311	3450	621
60	055/79011	என். ஜெயராமன் - மீன் மார்கெட் வணிக வளாக கடை		1725	311	1725	311	3450	621
61	055/79012	பி.வி. ரங்கராஜ் - மீன் மார்கெட் வணிக வளாக கடை		1725	311	1725	311	3450	621
62	055/79013	சம்பத்குமார் - மீன் மார்கெட் வணிக வளாக கடை எண் .6		1725	311	1725	311	3450	621
63	055/79019	வனிதா க/பெ. இளங்கோவன் - மீன் மார்கெட் வணிக வளாக கடை எண்.3		1725	311	1725	311	3450	621
64	055/79020	இளங்கோவன் த/பெ. புழனியப்பன் - மீன் மார்கெட் வணிக வளாக கடை எண். 4		1725	311	1725	311	3450	621
65	055/79021	I. வெங்கடாச்சலம் - மேட்டூர் ரோடு வாட்டர் டேங்க் வணிக வளாக கடை		1380	248	1380	248	2760	497
66	055/79022	பாரதிராஜா - மேட்டூர் ரோடு வாட்டர் டேங்க் வணிக வளாக கடை		1409	254	1409	254	2818	507
67	055/79023	சி.மாதையன் - மேட்டூர் ரோடு வாட்டர் டேங்க் வணிக வளாக கடை		1438	259	1438	259	2876	518
68	055/79024	வரதராஜன் - மேட்டூர் ரோடு வாட்டர் டேங்க் வணிக வளாக கடை		1438	259	1438	259	2876	518
69		**TOTAL**		339143	61046	339143	61046	678286	122091
வ.எண்	வரிவிதிப்பு எண்	குத்தகை இனங்கள் வரியாக (கடைகள்/வாரச்சந்தை/கட்டணகழிப்பிடங்கள் /பேரூந்து நுழைவு கட்டணம்/தினசரி சந்தை /சைக்கிள் /வாகனம் நிறுத்தங்கள் மற்றும் இதர இனங்கள் வாரியாக	**வருடாந்திர குத்தகை தொகை**	ஏப்ரல் 2020		மே 2020		மொத்தம் (01.04.2020 முதல் 31.05.2020 வரை)	
				மாத குத்தகை தொகை	GST	மாத குத்தகை தொகை	GST	மாத குத்தகை தொகை	GST
70	055/BD01/00008	கே.பாபு புதிய பேருந்து நிலையம் தகரப் பெட்டி கடை எண். 2	**6891**	574	-	574	- -	1148	-

71	055/BD01/ 00009	கே.எம். பழனிசாமி புதிய பேருந்து நிலையம் தகரப் பெட்டி கடை எண். 5	**7332**	611	-	611	-	1222	-
72	055/BD01/ 00010	எம். செல்லவேல் - புதிய பேருந்து நிலையம் தகரப் பெட்டி கடை எண். 3	**7222**	602	-	602	-	1204	-
73	055/BD01/ 00002	பிரகாஷ் - புதிய பேருந்து நிலையம் தகரப் பெட்டி கடை எண்.1	**6836**	570	-	570	-	1140	-
74	055/BDO1/ 00016	பாக்கியம் - புதிய பேருந்து நிலையம் பூக்கடை	**55677**	4640	-	4640	-	9280	-
75	055/BD01/ 00005	ஐ. வெங்கடாச்சலம் - ஆடு அடிக்கும் தொட்டி	**51818**	4318	-	4318	-	8636	-
76	055/BD01/ 00011	வி.மாரியப்பன் - புதிய பேருந்துநிலையம் கட்டண கழிப்பிடம்	**277830**	23152	-	23152	-	46304	-
77	055/BD01/ 00007	கே.சீரங்கன் - பழைய பேருந்து நிலையம் கட்டண கழிப்பிடம்	**156555**	13046	-	13046	-	26092	-
78	055/BD01/ 00016	கே.ராஜசேகரன் - புதிய பேருந்து நிலையம் இரு சக்கர வாகனம் நிறுத்துமிடம்	**525000**	43750	-	43750	-	87500	-
79	055/BD01/ 00003	கே.முருகன் - செல்லியாண்டியம்மன் மார்க்கெட் இருசக்கர வாகனம் நிறுத்துமிடம்	**49613**	4134	-	4134	-	8268	-
80	055/BD01/ 00004	டி.ராஜசேகர் - மீன் மார்கெட் நுழைவு கட்டண வசூல்	**1653750**	137812	-	137812	-	275624	-
81	055/BD01/ 00006	பி.செல்வம் - தினசரி மார்கெட் நுழைவு கட்டண வசூல்	**2761763**	230147	-	230147	-	460294	-
82	055/BD01/ 00001	கே.சிங்காரவேலன் - புதிய பேருந்து நிலையம் தொலைக்காட்சி பெட்டி விளம்பர கட்டணம்	**192938**	16078	-	16078	-	32156	-
		TOTAL		**477077**	**-**	**477077**		**958868**	**-**
		GRAND TOTAL		**816220**	**61046**	**816220**	**61046**	**1637154**	**122091**

மேற்கண்ட பட்டியலில் வரிசை எண்.1 முதல் 82 வரையுள்ள குத்தகை இனங்களுக்கு ஏப்ரல் 2020 மற்றும் மே 2020 ஆகிய இரண்டு மாதங்களுக்கு மட்டும் வாடகை தொகையினை தள்ளுபடி செய்ய ஏதுவாக அம்மாதங்களுக்கான கேட்பினை கேட்பு பதிவேட்டில் UTIS வழியாக நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மேற்கண்டவாறு ஏப்ரல் 2020 மற்றும் மே 2020 ஆகிய இரண்டு மாதங்களுக்கு மட்டும் நகராட்சி குத்தகை இனங்களுக்கான கேட்புத் தொகையினை நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.480/2020/அ2)

6. பவானி நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் இயங்கிக் கொண்டு இருக்கும் 120KVA ஜெனரேட்டரை Periodic Service செய்ய KOEL CARE நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட Service Dealer ஆன திருவாளர் Electro Controls, Erode. அவர்களிடமிருந்து கீழ்கண்ட விபரப்படி வேலைகள் செய்ய Quotation தொகை ரூ.10517/-க்கு பெறப்பட்டுள்ளது.

1. Oil 20 litre can
2. Spinon lube oil filter
3. Fuel filter element Assly
4. Fuel filter element pre
5. Freight charges
6. Coolant premix 5 litre can
7. Labour charge

எனவே மேற்கண்ட வேலைகளை செய்து முடிக்க மேற்கண்ட Dealer ஆன திருவாளர் Electro Controls, Erode அவர்களுக்கு தொகை ரூ.10517/- ஐ செலுத்தி வேலை செய்து முடிக்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் நிதி 2020-2021 ல் செலவை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1114/2020/இ1)

7. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 29280/2020/W.B. நாள்: 25.09.2020 (Period From 01.10.2019 முதல் 31.12.2019 முடியவும் மற்றும் 01.01.2020 முதல் 31.03.2020 முடிய) பவானி நகராட்சிக்கு மின் ஆளுமை இணைய தள மென்பொருள் சேவைக்கு கட்டணம் தொகை ரூ.48295 +48295 = ரூ96,590/- ஐ BSNL நிறுவனத்திற்கு ECS மூலமாக செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே அவசரம் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை ரூ.96,590/-ஐ வருவாய் நிதியில் இருந்து BSNL நிறுவனத்திற்கு செலுத்தியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண். 391/2015/டி2)

8. பவானி நகராட்சிக்கு எதிராக திரு.P.பாலாஜி த/பெ. B.M,பழனியப்பன் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.No.12424/2020 வழக்கு எண்ணில் குத்தகை இனங்கள் மற்றும் அச்சம் மற்றும் அருவருக்கத்தக்க உரிம கட்டணம் தொடர்பாக வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் திரு.வி. ஜெயபிரகாஷ் நாராயணன், மாநில அரசு வழக்கறிஞர், சென்னை அவர்கள் மூலம் உயர்நீதிமன்றத்தில் வாக்காலத்து சமர்ப்பித்து மேற்படி வழக்கில் வழக்காட ரூ.15,000/- வழங்க கேட்டு மின்னஞ்சல் மூலம் தெரிவித்துள்ளார்கள். எனவே, இவ்வழக்கில் மேற்படி அரசு வழக்கறிஞருக்கு வழக்காடுதல் கட்டணமாக ரூ.15,000/- வழங்கிடவும், மேற்படி வழக்கில் திரு.வி.ஜெயபிரகாஷ் நாராயணன், மாநில அரசு வழக்கறிஞர், சென்னை அவர்களை பவானி நகராட்சியின் சார்பில் வழக்காட நியமித்துக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதி வழக்கு கட்டணம் செலுத்திட தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.690/2020/எச்1)

9. பவானி நகராட்சியில் உள்ள 27 வார்டு பகுதிகளிலும் டெங்கு மற்றும் கொசுக்களால் பரவும் நோய்களை கட்டுப்படுத்திட அபேட் மருந்து தெளித்தல், கொசுப்புழுக்களை அழித்தல் மற்றும் புகை மருந்து தெளித்தல் போன்ற பணிகளுக்கு தினமும் 35 பணியாளர்களை (DBC Workers) நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ள வெளிப்பணி ஒப்படைப்பு முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரி M/s Trustus Outsourcing Solutions Pvt Ltd, Chennai அவர்களுக்கு உத்திரவு வழங்கப்பட்டு நோய் தடுப்பு பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ந.க.எண்: 274/2020/எச்1, நாள்: 03.08.2020-இன் படி நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.533/- (ESI and EPF உட்பட) என்னும் ஊதிய விகிதத்தின் அடிப்படையில் பணியாளர்களை வழங்க உத்திரவிடப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. DBC பணியாளர்களை 01.01.2020- முதல் தொடர்ந்து பயன்படுத்தி இந்நகராட்சியில் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதன் பலனாக பவானி நகராட்சியில் 2020ஆம் ஆண்டின் நாளது தேதி வரை எந்தவொரு நபரும் டெங்கு நோயினால் பாதிக்கப்படவில்லை என்ற நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் பணியின் ஒப்பந்தகாலம் எதிர்வரும் 02.10.2020-ஆம் தேதியுடன் முடிவடையும் நிலையில் M/s Trustus Outsourcing Solutions Pvt, Ltd, Chennai அவர்களின் 25.09.2020-ஆம் தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக ஒப்பந்த காலத்திற்கு பின்பு அதே ஒப்பந்த விகிதத்தில் தொடர்ந்து பணியாளர்களை வழங்கி பணி மேற்கொள்ள சம்மதம் தெரிவித்து கடிதம் வழங்கியுள்ளார்.

இந்நிலையில், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்தில் டெங்கு கடித எண்: 12392/ஜெ2/2020, நாள்: 21.08.2020 தேதியிட்ட கடிதத்தில் DBC பணியாளர்களை முழு அளவில் ஈடுபடுத்தி ஏடிஸ் கொசுப்புழு தடுப்பு நடவடிக்கைகளை திறம்பட மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார்கள். மேலும், கடந்த 30.07.2020-ஆம் தேதியன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் மதிப்பீட்டுத் தொகையான ரூ.9.90 இலட்சத்தில் ரூ.4,62,651/- மட்டுமே செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மதிப்பீட்டுத் தொகையில் மீதமுள்ள தொகை ரூ.5,27,349/- இல் மேற்காணும் பணியாளர்களை 28 தினங்களுக்கு நோய் தடுப்பு பணிகளுக்கு ஒப்பந்ததாரர் மூலம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.533/- விலை விகிதத்தில், நகர் மக்களின் பொது சுகாதார நலன் கருதியும், நோய் தடுப்பு பணிகளின் அவசியம் கருதியும், M/s Trustus Outsourcing Solutions Pvt, Ltd, Chennai அவர்களின் ஒப்பந்த காலத்தினை 03.10.2020-ஆம் தேதியிலிருந்து 28 வேலை நாட்களுக்கு பணி மேற்கொள்ள ஏதுவாக கால நீட்டிப்பு செய்து நோய் தடுப்பு பணிகளை தொடர்ந்து நல்ல முறையில் மேற்கொள்வதற்கும், அதற்காகும் செலவினம் ரூ.5,27,349/-ற்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.274/2020/எச்1)

10.) பொது சுகாதார பிரிவின் பராமரிப்பில் உள்ள வாகனம் TN 36 AL 4167-ன் டயர்கள் நான்கும் பட்டன்கள் தேய்ந்து இயக்க முடியாத நிலை உள்ளதனால் மேற்படி வாகனத்திற்கு புதியதாக 155/80D-12LT Model MRF Tyre Tube - 4 No's வாங்கி பொருத்திக் கொள்வதற்கும் அதற்காகும் செலவினம் ரூ.10,000/-ற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.021/2019/ எச்1)

11) பவானி நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் பணிபுரிந்து வரும் துாய்மை பணியாளர்கள் 54 நபர்களுக்கு பச்சை கலர் டர்பன் தலைப்பாகை துணி நபர் ஒருவருக்கு 2 மீட்டர் அளவில் 2020-21ஆம் ஆண்டில் மொத்தம் 108 மீட்டர் வழங்க வேண்டியுள்ளது. மேற்படி, துணியினை அரசு நிறுவனமான Tamilnadu Khadi and Village Industries Board (Khadi Kraft), ஈரோடு அவர்களிடமிருந்து காதி கிராப்டின் விலைவிகிதமான ரூ.165/- (மீட்டர் ஒன்றுக்கு) என்னும் விலைவிகிதத்தில் வாங்கிக்கொள்ளவும், அதற்காகும் மொத்த செலவினம் ரூ.17820/-கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.280 /2020/எச்1)

12) பவானி நகராட்சி - துாய்மை இந்தியா திட்டம் - திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மத்திய அரசின் MOUD துறையினர் Star Rating ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வழங்கி வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக பவானி நகராட்சியில் சேகரமாகும் திடக்கழிவுகளை திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 -ன் படி தரம் பிரித்து கையாளப்பட்டு வருவதுடன், இந்நகராட்சிக்கு SBM திட்டத்தின் கீழ் ODF+ சான்றும் பெறப்பட்டு நடைமுறையில் உள்ளது. மேலும் இந்நகராட்சியில் Secondary Storage and Transportation செய்வது முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளது. எனவே, பவானி நகராட்சியினை குப்பையில்லா நகராட்சியாக (Garbage free city) மூன்று நட்சத்திர அங்கீகாரம் (Three Star Rating) பெறுவதற்கு இந்நகராட்சியின் சுய உறுதிமொழி சான்றிதழுக்கும் (Self Declaration), இந்நகராட்சியினால் பெறப்பட்டுள்ள சுய உறுதிமொழி சான்றிதழ்களுக்கும் (Self Declaration from citizen categories) மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

பொதுமக்களின் ஆட்சேபனைகள் மற்றும் கருத்துகளை பெறுவதற்கு ஏதுவாக மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், ஈரோடு அவர்கள் மூலம் மாவட்ட அளவிலான தினசரி தமிழ் நாளிதழ் ஒன்றில் 10cm x 8cm அளவில் விளம்பரம் செய்து நடவடிக்கை மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், ஈரோடு அவர்கள் மூலம் மாவட்ட அளவிலான தினசரி தமிழ் நாளிதழ் ஒன்றில் ஈரோடு பதிப்பில் 10cm x 8cm அளவில் விளம்பரம் செய்வதற்கு ஆகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் ஒப்புதல் வழங்கலாம். (ந.க.எண்.359/2019/எச்1)

13. பவானி நகராட்சியில் பணிபுரிந்து வரும் காலணிகளை பெற தகுதியான துாய்மை பணியாளர்கள் அனைவருக்கும் 2020 -2021 ஆம் ஆண்டிற்கு தேவையான காலணிகளை அரசு நிறுவனமான Tamilnadu Khadi and Village Industries Board, Chennai, அவர்களிடமிருந்து (Khadi kraft) வாங்கிக் கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.20,000/-ற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.280/2020/எச்1)

14. இந்நகராட்சிப் பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தினமும் உருவாகும் கழிவுகளை வீடுவீடாக சென்று தரம்பிரித்து சேகரிக்கப்படும் மக்காத கழிவுகளில் மறுசுழற்சிக்குப் பயன்படாத பிளாஸ்டிக் கழிவுகள், இரப்பர் தோல்பொருட்கள், உடைந்த மரக்கட்டைகள், உடைந்த மரச்சாமான்கள், பழைய மிதியடிகள், மற்றும் இதர எரியும் தன்மையுடைய கழிவுகளை முறைப்படி அப்புறப்படுத்திட இன்ஸ்னிரேட்டர் வசதி இந்நகராட்சியில் இல்லாததால் சுற்றுச்சுழலுக்கு பாதிப்பு ஏற்படா வண்ணம் மேற்படி கழிவுகளை M/s Ultractech cements, Ariyalur, M/s Dalmia cements, Dalmiapuram, M/s ACC Cements, மதுக்கரை, கோயம்புத்தூர், M/s. இந்தியா சிமெண்ட்ஸ், சங்ககிரி போன்ற சிமெண்ட் ஆலைகளுக்கும், மற்றும் M/s. Mak India Ltd., Erode அவர்களுக்கும் அவ்வப்போது ஆலையின் அனுமதியினை பெற்று அவ்வப்போது தேவைக்கேற்ப கொண்டு சென்று அப்புறப்படுத்த தேவையான JCB வாகனம் மற்றும் சரக்கு ஏற்றி செல்லும் லாரிகளை வாடகைக்கு அமர்த்தும் முறையில் ஈடுபடுத்தி கழிவுகளை கொண்டுசென்று இறுதியாக்கம் (Final Disposal of compustable Wastes) செய்து அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இப்பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.359/2018/எச்1)

15) பவானி நகராட்சி பகுதியில் உள்ள ஆதிதிராவிடர் / பழங்குடியினர், மதம் மாறிய கிறிஸ்துவ ஆதிதிராவிடர் குடும்பங்களில் ஏற்படும் இறப்புகளுக்கு இறந்தவர்களின் ஈமகிரியை செய்வதற்காக இறந்தவரின் குடும்பத்திற்கு ரூ.2500/- மானியம் வழங்கும் திட்டத்தின் மூலமாக 2019-20ஆம் நிதியாண்டிற்கு இந்நகராட்சிக்கு ரூ.50,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி 2020-21-ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின் மூலம் இறந்தவர் குடும்பங்களுக்கு தலா ரூ.2,500/- வீதம் ஈமச்சடங்கிற்காக மான்யம் வழங்கிட மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.1824/2018/எச்1)

16) இந்நகராட்சிப்பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தினமும் உருவாகும் கழிவுகளை வீடுவீடாக சென்று தரம்பிரித்து சேகரிக்கப்படும் மக்காத கழிவுகளில் மறுசுழற்சிக்குப் பயன்படாத பிளாஸ்டிக் கழிவுகள், இரப்பர் தோல்பொருட்கள், உடைந்த மரக்கட்டைகள், உடைந்த மரச்சாமான்கள், பழைய மிதியடிகள் மற்றும் இதர எரியும் தன்மையுடைய கழிவுகளை முறைப்படி அப்புறப்படுத்திட இன்ஸ்னிரேட்டர் வசதி இந்நகராட்சியில் இல்லாததால் சுற்றுச்சுழலுக்கு பாதிப்பு ஏற்படா வண்ணம் மேற்படி கழிவுகளை M/s Ultractech cements, Ariyalur, M/s Dalmia cements, Dalmiapuram, மற்றும் M/s MAk India Ltd., Erode அவர்களுக்கும் அவ்வப்போது ஆலையின் அனுமதியினை பெற்று அவ்வப்போது தேவைக்கேற்ப கொண்டு சென்று அப்புறப்படுத்த தேவையான JCB வாகனம் மற்றும் சரக்கு ஏற்றி செல்லும் லாரிகளை வாடகைக்கு அமர்த்தும் முறையில் ஈடுபடுத்தி கழிவுகளை கொண்டு சென்று இறுதியாக்கம் (Final Disposal of Combustibles Wastes) செய்து அப்புறப்படுத்த ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு ஒப்பந்த அடிப்படையில் M/S ARO Transport, Sipcot, IOB Bank Opp. Perundurai, Kovai Main Road, Perundurai - 638 052 அவர்களிடம் சரக்கு ஏற்றி செல்லும் லாரிகள் பெறப்பட்டு கழிவுகள் சிமெண்ட் ஆலைகளுக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

இந்நிலையில் M/S ARO Transport, Sipcot, IOB Bank Opp, Perundurai, Kovai Main road, Perundurai - 638 052 அவர்களின் 01.09.2020 -ம் தேதியிட்ட கடிதத்தில் மேற்படி நிறுவனம் ஏற்கனவே, இப்பணிக்கு வாகனங்களை வழங்கும் அதே ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் தொடர்ந்து 31.10.2020 ஆம் தேதி வரை வாகனங்களை வழங்கிட சம்மதம் தெரிவித்துள்ளார்கள். இந்நிலையில் இப்பணிக்கென ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட செலவினத்தில் ரூ.47,320/- மீதமுள்ளதால் அத்தொகையினை எதிர்வரும் 31.10.2020ஆம் காலம் வரை செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இந்நிலையில் தற்போது 25.03.2020 ஆம் தேதியிலிருந்து தமிழகம் முழுவதும் கோவிட் -19 நோய் தடுப்பு நடவடிக்கைகளினால் ஊரடங்கு உத்திரவு

அமல்படுத்தப்பட்டுள்ளதால் பொது சுகாதாரப்பணியின் அவசியம் கருதி இந்நிறுவனம் ஏற்கனவே வழங்கிய ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தில் பணி மேற்கொள்ள M/s. ARO Transport, Sipcot, IOB bank Opp, Perundurai, Kovai Main road, Perundurai - 638 052 அவர்களின் ஒப்பந்த காலத்தை 01.09.2020-ம் தேதி முதல் 31.10.2020 ஆம் தேதி வரை கால நீட்டிப்பு செய்து கொள்ளவும், இப்பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.47,320/- ற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.1628/2019/எச்1)

17.அரசாணை நிலை எண்: 170, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (ம.அ.தி:3), நாள்: 27.10.2020-இன் படி, பவானி நகராட்சி பகுதியில் புரட்சிதலைவி அம்மா விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டு திட்டம் சம்மந்தமாக நகராட்சி பகுதியில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களின் வருவாய் ஈட்டுபவர் (Bread Winner) மற்றும் பரிந்துரைக்கப்பட்டவர் (Nominee) போன்றவர் விபரங்களை களப்பணிக்கு சென்று அக்குடும்பங்களிடமிருந்து ஆதார் எண், ஸ்மார்ட் கார்டு எண், மற்றும் வங்கி கணக்கு எண், வங்கி கிளை, IFSC code, முழு அஞ்சல் முகவரி போன்றவற்றை DBC பணியாளர்கள் மற்றும் பரப்புரையாளர்கள்(Animators) மற்றும் தனியார்களை கொண்டு சேகரிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

இந்நகராட்சியில் மேற்படி சேகரிக்கப்படும் விபரங்களை தினமும் Online-ல் WWW.TIPPS.IN Web site-இல் பதிவேற்றம் செய்ய வேண்டியுள்ளதால் வெளிப்பணி ஒப்படைப்பு முறையில் புள்ளி விபர தொகுப்பாளர்களை (Date Entry Operators) வழங்குநரிடமிருந்து விலைப்புள்ளி கோரியும் சர்வே பணி மற்றும் Entry பணி மேற்கொள்ளவும், WWW.TIPPS.IN Web site-இல் பதிவிறக்கம் செய்யப்பட்ட படிவங்களை TAMILNADU MULTIPURPOSE INDCO SERVE, TRICHY கூட்டுறவு நிறுவனத்தில் அவர்களிடத்தில் 100 படிவம் (மூன்று பக்கம்) அச்சடித்து வழங்க - ரூ.375/- + GST 12 % என்னும் விலை விகிதத்தில் 3288 படிவங்கள் அச்சிடும் பணி மேற்கொள்வதற்கும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.50,000/-ற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட அரசாணையின்படி களப்பணிக்கு சென்று விபரங்களை சேகரிக்கவும், விபரங்களை பதிவேற்றம் செய்யவும் தனியாரிடம் இருந்து விலைப்புள்ளிகள் பெற்று பணி மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1058/2020/எச்1)

18. பவானி நகராடசி அலுவலகத்தில் கீழ்கண்ட பணிகள் செய்ய வேண்டியுள்ளது. ஆணையாளர் அறையில் அலுமினியம் தடுப்பு அமைத்தல், மின் பணிகள் செய்தல் அலுவலக பிரதான நுழைவு வாயிலில் Collapsible Grill gate பொருத்துதல், Surveyor Room-ல் Main Wooden Door Frame Repair work, Fitter Room Grill ஜன்னல் மாற்றுதல், அலுவலக வளாகத்தில் பைப்லைன் அமைத்து Wash Basin பொருத்துதல் , தென் கிழக்கு மூலையில் சுற்றுச்சுவர் நேர் செய்து கட்டுதல், அலுவலக பணிக்கு Steel cupboard வாங்குதல், Rain Water Drain fall pipe பழுது பார்த்தல், அலுவலகத்தில் பழுதுபட்டுள்ள Net Chair பழுது பார்த்தல், பழைய இரும்பு, மர ஜன்னல்களுக்கு பெயிண்ட்டிங் செய்தல், தெற்குபுற நுழைவு வாயிலில் பழுதுபட்டுள்ள கேட் Pillorரை சரி செய்தல், அலுவலகத்தில் மின் பணிகள் செய்தல், பொறியாளர் அறையில் ஜன்னல் மற்றும் கதவுகளுக்கு curtain அமைத்தல், ஜென்செட் அறைக்கு புதியதாக Battery பொருத்துதல், Biometric Device பொருத்துதல் மற்றும் இதர பராமரிப்பு பணிகள் செய்ய வேண்டியுள்ளது. இதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது நிதியில் செலவை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1169/2020/இ1)

19. பவானி நகராட்சியில் துாய்மை இந்தியா திட்டம் (SBM) -ல் ODF + சான்று புதுப்பிக்க வேண்டியுள்ளதால் கீழ்கண்ட நகராட்சி கழிப்பிடங்களை புதுப்பித்து மேம்பாடு செய்ய வேண்டியுள்ளது. இதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. சமுதாய கழிப்பிடம் - மகாத்மா காந்தி ரோடு , வார்டு எண்.12
2. சமுதாய கழிப்பிடம் - வாரசந்தை ரோடு - வார்டு எண்.13
3. பொதுக்கழிப்பிடம் (கட்டணக்கழிப்பிடம்) பேருந்து நிலைய வளாகம் வார்டு -4

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது நிதியில் செலவை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1404/2020/இ1)

20. பவானி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 27 வரை உள்ள அனைத்து பகுதிகளிலும் பொது மக்களுக்கு தண்ணீர் வசதிக்காக பயன்படுத்தி வரும் மினி பவர் பம்புகள், பவர் பம்புகள் மற்றும் பொது கழிப்பிடங்களில் தண்ணீர் வசதிக்காக பயன்டுத்தும் ஏர்கம்ரசர்களில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்ய 2020 -21 ஆம் நிதி ஆண்டிற்கு இரண்டாம் கட்டமாக ஆண்டு பராமரிப்பு பணி செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் நிதியிலிருந்து செலவை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1092/2020/இ1)

இடம்: பவானி

நாள்: 30.09.2020

(ஒம்)திருமதி.S.M.பாரிஜான்
ஆணையாளர்/தனி அலுவலர்
பவானி நகராட்சி